[திரு. ப. மாணிக்கம்] [1981 மார்ச் 25

மற்றொன்று, சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலே போடப்பட்டுள்ள சர் சார்ஜைப் புனர் பரிசிலனை செய்ய வேண்டும். பெட்ரோலியம் டீசல் மீது வரி போட வேண்டுமா என்று மீண்டும் பரிசிலித்துப் பார்க்க வேண்டும்.

மதுவிலக்கை நிச்சயமாக மாற்றலாம். மாற்றுவது வரவேற்கப்படும். மாற்றுவது எதிர்பார்க்கப்பட்டது. மக்கள் மிகவும் வரவேற்பார்கள். இது ஒரு 'கெடுதலை நீக்கிய பட்ஜெட்'. மதுவிலக்கு என்பது மக்கள் மீது வந்திருக்கக்கூடிய ஒரு சாபம். அந்தச் சனியன் நீங்கிவிட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-42)

இணைப்பு I

[72 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நெல்லை மாவட்டத்தில் 1981 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 59 பேர் ஜயப் பாட்டிற்குரிய மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், மாவட்டத்தில் உள்ள மற்ற மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 10 பேர் இறந்து விட்டனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அனைவருக்கும் அவர்களுடைய உடலில் தோன்றியுள்ள அறிகுறிகளின் அடிப்படையில் சிகிச்சை (Sympotomatic Treatment) அளிக்கப்பட்டுள்ளது ஏனெனில் இதற்கென்று தனி சிகிச்சை முறை எதுவும் கண்டு பிடிக்கப் படவில்லை. பாதிக்கப்பட்டவர்களை எல்லாம் உடனடியாக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்ய மாவட்ட நல அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் இரத்தமாதிரி எடுத்து பூனாவிலுள்ள தேசிய நுண்கிருமி ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், பெங்களூரிலுள்ள அதன் கிளைக்கும் அல்லது மதுரை மருத்துவக் கல்லூரியிலுள்ள நுண்ணியல் பிரிவுக்கும் ஆராய்ச்சிக்காக அனுப்பி வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சுற்றுப் புறத்தைப் பேணிக்காத்தலும், ஒழிப்பு நடவடிக்கைகளும் இவ்வியாதியை ஒழிக்க இன்றியமையாததால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

1981 மார்ச் 25]

சதவிகிதம் எனப்படும் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டு இருக்கிறது பொது சுகாதாரத்துறையினரும், மருத்துவத் துறையினரும் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துள்ளனர். எனவே எந்தவித பதட்டமும் அடையத் தேவையில்லை எனக் கூறிக்கொள்கிறேன்.

இணைப்பு II.

[272 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக்காண்க.]

அண்மையில் மத்திய அரசு ஏற்படுத்திய பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக 10—2—1981 நாளிட்ட உள்துறை அரசாணை எண். (பல்வகை) 288-ல் ஆட்டோரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணத்தை பின்கண்டவாறு மாற்றி அமைக்க மாநிலப் போக்குவரத்து அதிகார மன்றத்திற்கு ஓர் வரைவு கட்டளையைப் பிறப்பித்துள்ளது:

ஆட்டோரிக்ஷா.

1. குறைந்தபட்ச கட்டணம் ரூ. 1.70
2. ஒரு கி. மீ. தூரத்திற்கு—ரூ. 0.80
3. நிலுவை கட்டணம்—பத்து நிமிடங்களுக்கு பத்து காசுகள்

டாக்சி.

1. குறைந்தபட்ச கட்டணம்—ரூ. 3.00
2. ஒரு கி. மீ. தூரத்திற்கு—ரூ. 1.50
3. நிலுவைக்கட்டணம்—ஐந்து நிமிடங்களுக்கு பத்து காசுகள்

மேற்கூறிய வரைவு கட்டளையின் மீது ஒரு மாத காலத்திற்குள் பெறப் படும் ஆலோசனைகளையும், மறுப்புகளையும் பரிசீலித்து இக்கட்டளை ஊர்ஜிதம் செய்யப்படும்.

மறுப்புகள் மற்றும் ஆலோசனைகளின் மீதான நேரடி கலந்தாலோச னையை (Oral hearing) தலைமை செயலகத்தில் பத்தாவது மாடியிலுள்ள மாநாட்டுக் கூடத்தில் 30—3—1981 அன்று காலை 11.00 மணிக்கு உள்துறை செயலாளர் நடத்துவார்.

4. பொதுவாகவே காவல்துறையினருக்கும்; போக்குவரத்து அதிகாரி களுக்கும் இதை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித் துள்ள கட்டணத்தைக் காட்டிலும் அதிக கட்டணத்தை கேட்கும் தனிப்பட்ட ஓட்டுனர்கள் மீது புகார்கள் கொண்டு வரப்படுமாயின் தக்க நடவடிக்கை எடுக் கப்படும். உறுப்பினர்களின் புகார் பொதுவானதாக உள்ளதால் குறிப்பிட்ட நடவடிக்கை எதும் எடுக்க இயலாது.